வளரிளம் பருவத்தினரின் தன்னுரிமை மேம்பாட்டுக்காகவும் குழந்தைத் திருமணத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கான யுனிசெஃப் நிறுவனத்தின் திட்டம், இந்தியாவில் 11 மாநிலங்களில் அரசு அமைப்புகளுடனும், தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடனும் சேர்ந்து அமலாக்கப்பட்டு வருகிறது. தேசிய அளவில் NCCDC (New Concepts-Centre for Development Communication) நிறுவனம் யூனிசெப்பின் இத் திட்டத்திற்கு தேவைப்படும் அனைத்து தகவல் தொடர்பு சாதனங்களையும் **“தாருண்யா”** என்ற கருத்துப் பெட்டகமாக உருவாக்கி உள்ளது. கருத்துப் பெட்டகத்தில் உள்ள தகவல் தொடர்பு சாதனங்களை, மொழிபெயர்த்தும், தமிழகச்சூழலுக்கு ஏற்ப தழுவியும் உருவாக்கப்பட்டதுதான் இந்த **“இளந்தென்றல்”** கருத்துப் பெட்டகம். மாநில கருவூல மையம் உருவாக்கி உள்ள இந்த இளந்தென்றல் பெட்டகம், சமூக நலத்துறையின் முன்னெடுப்புடன் தமிழ்நாட்டின் பிற துறைகளுக்கும் கொண்டு செல்லப்பட உள்ளது.

இளந்தென்றல்

குழந்தைத் திருமணத்தை
முடிவுக்குக் கொண்டு வருவோம்!

இளந்தென்றல்

# இளந்தென்றல் கருத்துப் பெட்டகம்:
# ஓர் அறிமுகம்



unicef
for every child

வாய்மையே வெல்லும்

# இளந்தென்றல் கருத்துப் பெட்டகம்
# - ஓர் அறிமுகம்

வளரிளம் பருவத்தினரின்
தன்னுரிமை மேம்பாட்டுக்காகவும் குழந்தைத் திருமணத்தை
முடிவுக்கு கொண்டு வருவதற்குமான திட்டத்தின் தகவல் தொடர்புப் பெட்டகம்

unicef
for every child




இளந்தென்றல் கருத்துப் பெட்டகம்: ஓர் அறிமுகம்

வளரிளம் பருவத்தினரின் தன்னுரிமை மேம்பாட்டுக்காகவும் குழந்தைத் திருமணத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்குமான திட்டத்தின் தகவல் தொடர்புப் பெட்டகம்

An introduction to Ilanthendral Communication Package

முதல் பதிப்பு: மார்ச், 2020

First Edition: March, 2020

வெளியீடு :

மாநில கருவூல மையம், சென்னை - 600 020.

State Resource Centre, Chennai - 600 020.

Email: sbtamilnadusrc@gmail.com

044-24914147

வடிவமைப்பு:

THY Designers & Computers

Triplicane, Chennai - 600 005


044-42113807

நன்றி:

வளரிளம் பருவத்தினரின் தன்னுரிமை மேம்பாட்டுக்காக யுனிசெஃப் (UNICEF) அமைப்பும் பிரேக் த்ரு (Break Through, New Delhi ) நிறுவனமும் இணைந்து ஆங்கிலத்தில் உருவாக்கிய கருத்துப் புத்தகத்தின் தமிழ் வடிவம்.

தமிழ் வடிவம்: மாநில கருவூல மையம்

தொடர்புக்கு: sbtamilnadusrc@gmail.com





# அறிமுகம்

ஒரு நாடு பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாகவும், கலாச்சார ரீதியாகவும் மேம்பாடு அடைய வேண்டுமென்றால் அந்த நாட்டின் பெண்களின் நிலையும், வளரிளம் பருவத்தினரின் நிலையும் மேம்பாடு அடைய வேண்டும். இதுதான் நீடித்த மேம்பாட்டு இலக்குகளை அடைவதற்கு உதவும். இதை மனதில் கொண்டு யுனிசெஃப் அமைப்பு, வளரிளம் பருவத்தினரின் தன்னுரிமை மேம்பாட்டுக்காகவும் குழந்தைத் திருமணத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்காகவும், இந்தியாவில் 11 மாநிலங்களில் அரசு அமைப்புகளுடனும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடனும் சேர்ந்து பணியாற்றி வருகிறது. தேசிய அளவில் நியூகான்செப்ட் NCCDC (New Concept Centre for Development Communication) நிறுவனம் யுனிசெஃப்பின் இத் திட்டத்திற்கு தேவைப்படும் அனைத்துத் தகவல் தொடர்பு சாதனங்களையும் **"தாருண்யா"** என்ற கருத்துப் பெட்டகமாக உருவாக்கி உள்ளது.

கருத்துப் பெட்டகத்தில் உள்ள தகவல் தொடர்பு சாதனங்களை, மொழி பெயர்த்தும், தமிழகச் சூழலுக்கு ஏற்ப தழுவியும் உருவாக்கப்பட்டதுதான் இந்த **"இளந்தென்றல் கருத்துப் பெட்டகம்"**.

**"தாருண்யா பெட்டகத்தின்"** தகவல் தொடர்பு சாதனங்கள் பிற மாநிலங்களில் ஆங்கிலத்திலும், இந்தியிலும் பயன்படுத்தப்பட்டாலும், தமிழ்நாட்டில் மட்டும் தமிழில் உருவாக்கப்பட்டுள்ளன. **"இளந்தென்றல் கருத்துப் பெட்டகத்தில்"** உள்ள செய்திகள், பயிற்சிக் கையேடுகள், புத்தகங்கள், பட அட்டைகள், குறும் படங்கள், போஸ்டர்கள் என பல்வேறு விதமாக வடிவமைக்கப்பட்டுள்ளன. பங்கேற்பு முறையிலும், செய்திகளை சுலபமாக புரிந்து கொள்ளும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளன.


மாநில கருவூல மையம் உருவாக்கி உள்ள இந்த **"இளந்தென்றல் கருத்துப் பெட்டகம்,"** தமிழ்நாட்டில் உள்ள அனைத்துத் துறைகளுக்கும், தமிழக அரசின் சமூக நலத்துறையின் முன்னெடுப்புடன் கொண்டு செல்லப்பட உள்ளது.

நமது நோக்கம் குழந்தைத் திருமணத்தை முடிவுக்குக் கொண்டு வருதல். அனைத்துத் தரப்பினரும் இணைந்து செயல்பட்டால்தான் குழந்தைத் திருமணத்தை முடிவுக்குக் கொண்டு வர முடியும். இந்த முயற்சியில் அனைவரும் ஒன்றிணைவோம்!



# பொருளடக்கம்


| வ.எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1 | இளந்தென்றல் கருத்துப் பெட்டகம்  - ஓர் அறிமுகம் | 1 |
| 2 | குழந்தைத் திருமணத் தடுப்புச் செயல்பாட்டுக்கான கருத்தாக்கங்கள் | 5 |
| 3 | கருத்தாக்கங்களின் அடிப்படையிலான செயல் உத்திகள் | 12 |
| 4 | இளந்தென்றல் பெட்டகத்தில்  உள்ள தகவல் தொடர்பு சாதனங்கள் | 25 |



# இளந்தென்றல் கருத்துப் பெட்டகம் – ஓர் அறிமுகம்



இந்திய மக்கள் தொகையில், வளரிளம் பருவத்தினர் கிட்டத்தட்ட 24 கோடி பேர். வளரிளம் பருவம் என்பது குழந்தைப் பருவத்திற்கும், வளர்ச்சியடைந்த மனிதர் ஆவதற்கும் இடைப்பட்ட பருவம்.

- வளரிளம் பருவத்தில் உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் துரிதமான வளர்ச்சி நிகழ்கிறது. வளர்ச்சி வாழ்வின் பல வாசல்களைத் திறப்பது போல், பல சவால்களையும் எதிர் கொள்ள வைக்கிறது.

- இந்தியாவில் உள்ள லட்சக்கணக்கான இள வயதினருக்கு அடிப்படைக் கல்வி, உடல் நலம், சுதந்திரமான நடமாட்டம், இவை கிடைப்பதில்லை. எட்டு கோடிக்கும் மேற்பட்ட குழந்தைகள், இடைநிலைக் கல்வியையே முடிக்கவில்லை.


- 15-19 வயதிற்குள் உள்ள பெண்களில், 60% பெண் குழந்தைகள் இரத்த சோகையால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவை எல்லாம் சரி செய்யப்பட்டால்தான், பெரியவர்கள் ஆகும்பொழுது, அவர்களின் மேம்பாடு முழு வளர்ச்சியோடு சாத்தியமாகும்.

- கல்வி, உடல் நலம் போன்ற வளர்ச்சிக்கான அம்சங்களில் கவனம் செலுத்துவது மட்டும் போதாது. வளர்ச்சிக்குத் தடையாக உள்ள பாலினம் சார்ந்து வரும் வன்முறைகள், பாலின பாகுபாட்டுடன் நடத்தப்படுதல், முன்னேற்றத்திற்கான தகவல்களும், வாய்ப்புகளும் கிடைக்கப் பெறாத நிலை - இவை எல்லாம் வளரிளம் பருவத்தினரை, குறிப்பாக பெண்களை மேலும் பலவீனமானவர்களாக்கி அவர்கள் வாழ்க்கையையே பாதிக்கிறது. 2011–இல் எடுக்கப்பட்ட மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, இந்தியாவில் திருமணமான மொத்தப் பெண்களில் 47.4 % பெண்கள், 18 வயது நிறைவடைவதற்கு முன்பே திருமணம் ஆனவர்கள். (அதாவது 47. 4 % பெண்கள் குழந்தைத் திருமணம் செய்து கொண்டவர்கள் என்று குறிப்பிடுகிறது.)

- குழந்தைத் திருமணம் என்பது, பெண் குழந்தைகளை வன்முறை, வறுமை என நச்சு வட்டத்திலேயே சுழல வைக்கிறது. பள்ளியிலிருந்து நிறுத்தப்படுவதால் கல்வி கற்கும் வாய்ப்பு மறுக்கப்படுகிறது. நல்ல வேலை கிடைக்கும் வாய்ப்பும் பறி போகிறது.

- மிகச் சிறு வயதிலேயே திருமணமான பெண்கள், குடும்ப வன்முறை, பாலியல் ரீதியாக மோசமாக நடத்தப்படுவது, சமூகரீதியாக தனிமைப்படுத்தப்படுவது போன்ற பிரச்சினைகளை எதிர் கொள்கிறார்கள். இதே போல் சிறு வயதிலேயே பாலியல் ரீதியான உறவுக்கு உள்ளாவது, இளவயதுத் தாய்மை பொறுப்பைத் தருகிறது. அதிக அளவிலான





தாய் சேய் மரணத்திற்கு இது காரணமாகிறது. பால்வினை நோய்கள், எச்.ஐ.வி/எய்ட்ஸ் போன்ற பல உடல் நலப் பிரச்சினைகளுக்கும் இவர்கள் ஆளாகின்றனர்.

- ஒரு நாடு, தன்னுடைய நீடித்த மேம்பாட்டு இலக்குகளை அடைவதற்கு பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் கலாச்சார ரீதியாகவும் மேம்பாடு அடைய வேண்டும். அவ்வாறு மேம்பாடு அடைவதற்கு அந்த நாட்டில் உள்ள பெண்களின் நிலையும், வளரிளம் பருவத்தினரின் நிலையும், மேம்பாடு அடைய வேண்டும்.

- இதை மனதில் கொண்டு யுனிசெஃப் அமைப்பு, வளரிளம் பருவத்தினரின் தன்னுரிமை மேம்பாடு மற்றும் குழந்தைத் திருமணத்தை முடிவுக்கு கொண்டு வருவதன் பொருட்டு, அரசு சார்ந்த, அரசு சாராத பல்வேறு அமைப்புகளுடனும் இணைந்து பணியாற்றுகிறது.


- யுனிசெஃப்பின் இத்திட்டம், இந்தியாவில் 11 மாநிலங்களில் அரசு அமைப்புகளுடனும், தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடனும் சேர்ந்து அமலாக்கப்பட்டு வருகிறது.

- தேசிய அளவில் நியூ கான்செப்ட் நிறுவனம் NCCDC (New Concept Centre for Development Communication) யுனிசெஃப்பின் இத்திட்டத்திற்குத் தேவைப்படும் அனைத்து தகவல் தொடர்பு சாதனங்களையும் **"தாருண்யா"** என்ற கருத்துப் பெட்டகமாக உருவாக்கி உள்ளது.

- கருத்துப் பெட்டகத்தில் உள்ள தகவல் தொடர்பு சாதனங்களை, மொழி பெயர்த்தும், தமிழகச் சூழலுக்கு ஏற்பத் தழுவியும் உருவாக்கப்பட்டதுதான் இந்த **"இளந்தென்றல் கருத்துப் பெட்டகம்".**

- வளரிளம் பருவத்தினரின் தன்னுரிமை மேம்பாடு மற்றும் குழந்தைத் திருமணத்தை முடிவுக்கு கொண்டு வருதல் என்பது, இரண்டு இலக்குகளானாலும், இரண்டும் கடைசியில் உறுதி செய்ய விரும்புவது, வளரிளம் பருவத்தினருக்கான முழுமையான வளர்ச்சியையே. இதை அடைவதற்கு வளரிளம் பருவ வாழ்வின் வளர்ச்சி மற்றும் சவால்கள் பற்றி தெரிந்துகொண்டு, உணர்ந்து செயல்படவும், முடிவுகள் எடுக்கவும் உதவும் வகையில் இந்த **"இளந்தென்றல் கருத்துப் பெட்டகம்"** உருவாக்கப்பட்டுள்ளது.

- **"தாருண்யா"** கருத்துப் பெட்டகத்தின் தகவல் தொடர்பு சாதனங்கள் பிற மாநிலங்களில் ஆங்கிலத்திலும், இந்தியிலும் பயன்படுத்தப்பட்டாலும், தமிழ்நாட்டில் மட்டும் தமிழில் உருவாக்கப்பட்டுள்ளன.





- மாநில கருவூல மையம் உருவாக்கி உள்ள இந்த **"இளந்தென்றல் கருத்துப் பெட்டகம்"**, தமிழ்நாட்டில் உள்ள அனைத்துத் துறைகளுக்கும், சமூக நலத்துறையின் முன்னெடுப்புடன் கொண்டு செல்லப்பட உள்ளது.

- இளந்தென்றல் கருத்துப் பெட்டகத்தில் உள்ள தகவல் தொடர்பு சாதனங்கள், வளரிளம் பருவத்தினரும், அவர்களிடையே பணியாற்றக்கூடிய முன்மாதிரி கல்வியாளர்களும், வன்முறை, சுரண்டல்கள், குழந்தைத் திருமணம் போன்ற பிரச்சினைகளிலிருந்து தற்காத்துக் கொள்வதற்கான தகவல் அறிவையும், திறன்களையும் அளிக்கின்றன. தெரிந்துணர்ந்து முடிவெடுப்பதற்கு உதவும் வாழ்க்கைத் திறன்களையும் அறிமுகப்படுத்துகின்றன.

- இதேபோல் வளரிளம் பருவத்தில் குழந்தைகள் உள்ள பெற்றோர்கள் ,அவர்கள் வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், பஞ்சாயத்துத் தலைவர்கள் என சமூகத்தின் அனைத்து தரப்பினரும் குழந்தைகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் சட்டங்களையும் திட்டங்களையும் அறிந்து, அவர்களுக்கு உதவும்படியாக ஒன்றிணைந்து செயல்படுவதற்கான செயல் உத்திகளையும் இந்தப் பயிற்சி பெட்டகம் அளிக்கிறது.

- இளந்தென்றல் கருத்துப் பெட்டகத்தில் உள்ள செய்திகள், பயிற்சிக் கையேடுகள், புத்தகங்கள், பட அட்டைகள், குறும் படங்கள், போஸ்டர்கள் என பல்வேறு விதமாக வடிவமைக்கப்பட்டுள்ளன. பங்கேற்பு முறையிலும், செய்திகளை சுலபமாகப் புரிந்து கொள்ளும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளன.



# குழந்தைத் திருமணத் தடுப்புச் செயல்பாட்டுக்கான கருத்தாக்கங்கள்





குழந்தைத் திருமணம் என்பது இந்திய அளவில் மட்டும் பிரச்சினை அல்ல. உலகளாவிய அளவில் உள்ள இந்தப் பிரச்சினையை முடிவிற்குக் கொண்டுவர யுனிசெஃப் உட்பட பன்னாட்டு அமைப்புகளும், பல்வேறு நாடுகளின் அரசு சார்ந்த, அரசு சாராத நிறுவனங்களும் சில கருத்தாக்கங்களின் அடிப்படையில் பல்வேறு செயல் உத்திகளை கையாண்டிருக்கின்றன.

குழந்தைத் திருமணத் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு குழந்தைத் திருமணத்தை முற்றிலுமாக முடிவுக்குக் கொண்டுவரப் பாடுபடும் நாம் அனைவரும் சில அடிப்படைக் கருத்தாக்கங்களை புரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. இந்தப் புரிதலின் அடிப்படையில் செயல்படும்போது நம் முயற்சிகளின் பலன் பன்மடங்கு ஆகியிருக்கும்.

சட்டங்களையும் திட்டங்களையும் தாண்டி குழந்தைத் திருமணம் ஏன் நடக்கிறது, இதற்கான காரணிகள் என்ன, முற்றிலும் ஒழிக்க நம் சிந்தனையில் வர வேண்டிய மாற்றங்கள் என்ன, இவற்றிற்காக நாம் யார் யாருடன் இணைந்து பணிபுரிய வேண்டும், எவ்விதமான பழைய கருத்தாக்கங்களை, சமூக நம்பிக்கைகளை உடைத்து புதியவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும் என்பது பற்றியும் நமக்குத் தெளிவான ஒரு வரைபடம் வேண்டும்.

இந்த வரைபடம் என்னும் செயல் திட்டத்தை வடிவமைக்க நாம் கீழ்க்காணும் சில கருத்தாக்கங்களைத் தனித்தனியாகப் புரிந்து கொள்வதோடு அவற்றை எப்படி ஒன்றோடொன்று இணைத்துப் பயன்படுத்த வேண்டும் என்றும் புரிந்து கொள்ள வேண்டும்.

நம்முடைய **"இளந்தென்றல் கருத்துப் பெட்டகத்தில்"** உள்ள பல்வேறு புத்தகங்களில் நாம் எதிர் கொள்ளவிருக்கின்ற சில கருத்தாக்கங்களை புரிந்து கொள்ளும்முன் அவற்றின் ஆங்கிலப் பெயர்களை அறிந்து கொள்வோம்.

**இளந்தென்றல் கருத்துப் பெட்டகத்தில் உள்ள பல்வேறு புத்தகங்களில் குறிப்பிடப்பட்டுள்ள இந்த கருத்தாக்கங்களின் பெயர்களையும் தமிழ் விளக்கங்களையும் பார்ப்போம்.**


*THEORY OF CHANGE* - மாற்றத்திற்கான கோட்பாடு


*SOCIO ECOLOGICAL MODEL (SEM)* - சமூக மற்றும் சுற்றுப்புறச் சூழல் மாதிரி

*SOCIAL AND BEHAVIOURAL CHANGE COMMUNICATION* - சமூகம் மற்றும் நடத்தை மாற்றத் தகவல் தொடர்பு

*SOCIAL NORMS* - சமூக விதிமுறைகள்

*GENDER BASED VIOLENCE (GBV)* – பாலினம் சார்ந்த வன்முறைகள்





## மாற்றத்துக்கான கோட்பாடு *(THEORY OF CHANGE )*

குழந்தைத் திருமணம் அல்லது இளவயது திருமணம் இல்லாத நாடாக மாற சட்டங்களும் திட்டங்களும் மட்டும் போதாது. நம்முடைய அனைத்து நடவடிக்கைகளையும் உள்ளடக்கிய மாற்றத்துக்கான ஒரு கோட்பாடு தேவைப்படுகிறது .

வளர்ச்சியின் வெவ்வேறு அம்சங்களை இணைத்து, வெவ்வேறு துறைகளை ஒன்றுசேர்த்து, வெவ்வேறு பங்காளர்களோடு இணைந்து பல்வேறு செயல்பாடுகளை உருவாக்கி அமல்படுத்த வேண்டி உள்ளது .

சிறிய அளவிளான செயல்பாடுகள், பெரிய அளவிலான செயல்பாடுகள் என இவை வடிவமைக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே நடைமுறையில் இருப்பவற்றில் உள்ள நிறைகுறைகளை ஆராய்ந்து, புதிய மாற்றத்திற்கான செயல் உத்திகளைத் திட்டமிடுவதற்கும் இந்த **மாற்றத்திற்கான கோட்பாடு *(THEORY OF CHANGE )*** உதவுகிறது.

மாற்றத்துக்கான கோட்பாட்டின் முக்கியக் கருத்தாக்கம் என்பது குழந்தைத் திருமணத்தை முடிவிற்கு கொண்டுவருவதற்கான ஒற்றைத் தீர்வு என்ற ஒன்று இல்லை என்றும் மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு அனைவருக்கும் பங்கு உள்ளது என்பதே ஆகும்.

## சமூக விதிமுறைகள் *(SOCIAL NORMS)*

சமூக விதிமுறைகள் என்பது மனித நடத்தையை வழிநடத்தும் எழுதப்படாத விதிகள். பெரும்பாலான சமயங்களில் நம் நடத்தைகள், மற்றவர்கள் என்ன செய்கிறார்கள் என நாம் நம்புகிறோம் என்ற நம்பிக்கைகளின் அடிப்படையிலும், நாம் என்ன செய்யவேண்டும் என மற்றவர்கள் நினைக்கிறார்கள் என்ற நம் எதிர்பார்ப்புகளின் அடிப்படையிலும் உருவாகிறது. ஆக நம் நம்பிக்கைகள், எதிர்பார்ப்புகள், நடத்தைகள் இணைந்துதான் சமூக விதிமுறைகளை உருவாக்குகின்றன.

குடும்பம், ஒத்த வயதினர், இனக்குழு அல்லது கிராம ஊராட்சித் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், சமயத் தலைவர்கள் / சமயப் பிரமுகர்கள் போன்ற நம் தொடர்புடைய குழுவிலுள்ள பெரும்பாலானவர்கள் இந்த நம்பிக்கைகளுக்கு இணங்கி நடக்கிறார்கள், அல்லது இணங்கி நடக்க வேண்டும் என்பதை நம்புகிறார்கள் .

காலம் காலமாக நமக்குள் ஆழமான கருத்துக்களாக வேரூன்றியிருக்கும் இந்த சமூக விதிமுறைகள் நம்முடைய கலாச்சார பழக்க வழக்கங்களின் மூலமும்



நியாயப்படுத்தப்படுகின்றன. குறிப்பாக குழந்தைத் திருமணம் தொடர்பான செய்திகளில் இயங்கக்கூடிய சமூக விதிமுறைகள் ஒரு பெண் பிறந்தவுடனேயே இன்னொருவர் வீட்டுக்கு போக வேண்டியவள்; அவள் வயதிற்கு வந்த உடனேயே திருமணம் செய்து விட வேண்டும் என்பதாக உள்ளது. சமூகத்தின் ஓர் அங்கமாக இருக்க வேண்டும் என்று நினைப்பவர்கள் இப்படி செய்வதுதான் சரி என்று நம்புகிறார்கள்.

## சமூக மற்றும் சுற்றுப்புற சூழல் மாதிரி *[(SOCIO ECOLOGICAL MODEL - SEM)]*

குழந்தைத் திருமணம் என்ற பிரச்சினைக்கு முடிவு கட்ட வேண்டும் என்றால் நாம் வாழும் சமூகத்தில் நம்மைச் சுற்றி உள்ளவர்கள் குழந்தைத் திருமணம் தொடர்பாக எந்த விதமான மதிப்பீடுகளையும் நம்பிக்கைகளையும் கொண்டுள்ளார்கள் என்பதை அறிந்து அதற்கான செயல் திட்டத்தை வகுப்பதன் மூலமே குழந்தைத் திருமணப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர இயலும்.

வளரிளம் பருவத்தினரை பெரிதாகப் பாதிக்கும் குழந்தைத் திருமணத்தோடு யார் யார் சம்பந்தப்பட்டு இருக்கிறார்கள், யாரோடு என்ன பணி செய்தால் குழந்தைத் திருமண பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவர முடியும் என்பதற்கு நமக்கான வழிகாட்டியாக இருப்பதுதான் சமூக மற்றும் சுற்றுப்புறச் சூழல் மாதிரி.


## சமூக மற்றும் நடத்தை மாற்றத் தகவல் தொடர்பு

## *(SOCIAL AND BEHAVIOURAL CHANGE COMMUNICATION - SBCC)*

குழந்தைத் திருமணம் என்பது சட்டங்களால், திட்டங்களால் மட்டும் சரி செய்துவிடக்கூடிய பிரச்சினையல்ல. பல சமயங்களில் பாலின வரையறைகள், பாலினம் சார்ந்த வன்முறைகள் எல்லாம் நம் பாரம்பரியம், கலாச்சாரம், மற்றும் பண்பாடு என்ற பெயரால் நியாயப்படுத்தப்படுகின்றன.

எனவே, குழந்தைத் திருமண பிரச்சினையை வெறும் தகவல்களைப் பரிமாறுவதன் மூலம் மட்டும் சரிசெய்துவிட முடியாது. மக்களின் மனதில் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும். சிந்தனையில் வரக்கூடிய மாற்றம் பல கேள்விகளை எழுப்ப வேண்டும், இந்தக் கேள்விகளின் அடிப்படையில் வரக்கூடிய தெளிவுதான் மாற்றத்திற்கு வழிவகுக்கும். அதற்காகத்தான் தகவல் அடிப்படையில் தொடர்பு கொள்ளுவதை விட்டுவிட்டு மனமாற்றத்தையும் நல் நடத்தையையும் உருவாக்குகின்ற நடத்தை மாற்றுத் தகவல் தொடர்பு என்ற கோட்பாட்டின் அடிப்படையில் நாம் இயங்கவேண்டியிருக்கிறது.

**இந்தக் கோட்பாடு 7 நிலைகளைக் கொண்டுள்ளது.** இதன் அடிப்படையில் இயங்கும் பொழுது ,




**ஒரு நல்ல செய்தி நல்ல பழக்க வழக்கமாகிறது.**



## வளரிளம் பருவத்தினரின் வாழ்க்கையோடு யார் யாரெல்லாம் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள்?

### முதல் வட்டம்


வளரிளம் பருவ ஆண்கள், பெண்கள் - தன்னுடைய வாழ்க்கை நன்கு அமைய வேண்டும் என்று அவர்களுக்குள் கனவுகள் இருக்கவேண்டும்.

### இரண்டாம் வட்டம்

குடும்பம் மற்றும் நண்பர்கள் – அவர்களுடைய கனவுகளை நிறைவேற்ற, வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்கக்கூடிய முதலிடத்தில் அவர்களுடைய பெற்றோர்களும் உற்றார் உறவினரும், தோளோடு தோள்நின்று உறுதுணையாக இருக்கும் தோழர்களும் இருக்கிறார்கள்.

### மூன்றாம் வட்டம்

பள்ளி ஆசிரியர்கள், பஞ்சாயத்து, சுய உதவிக்குழுக்கள், குழந்தைப் பாதுகாப்பு குழுமம், கிராமத்தைச் சார்ந்த பல்வேறு அமைப்புகளில் இருப்பவர்கள் அரசுத் தரப்பாக இருப்பவர்கள், தன்னார்வ அமைப்பில் இருப்பவர்கள், கிராம அதிகாரிகள் போன்ற வளரிளம் பருவத்தினருக்கு உதவக்கூடிய மிக நெருங்கியவர்கள்.




### நான்காம் வட்டம்


உரிமைகளை உறுதி செய்பவர்கள் – வெவ்வேறு துறைகளின் முன்னணி அலுவலர்கள், மாவட்டக் குழந்தைப் பாதுகாப்பு அலகு, காவல் துறை, குழந்தை திருமண தடுப்பு அதிகாரி, வளரிளம் பருவத்தினருடைய வாழ்க்கையில் பல்வேறுவிதமான அபிப்பிராயங்களை உருவாக்கிய ஊடகங்கள், வளரிளம் பருவத்தினர் பெரிதும் விரும்பக்கூடிய / நம்பக்கூடிய **ரோல் மாடல்** என்று சொல்லக்கூடியவர்கள்.

### ஐந்தாம் வட்டம்

கொள்கை வகுக்கும் நிறுவனங்கள் - வளரிளம் பருவத்தினர் வாழ்க்கைக்கான கொள்கைகளை வகுப்பவர்கள் , கொள்கைகளில் வரக்கூடிய மாற்றங்கள் கீழ் மட்டத்திற்கு செல்ல வேண்டும், கீழ்மட்டத்தில் தேவைகள் கொள்கைகளாக வரவேண்டும். இவ்வாறு அனைவரும் ஒன்றுகூடி வேலை பார்க்கும்போதுதான் ஒட்டுமொத்த வளர்ச்சி என்பது சாத்தியமாகும்.

### பாலினம் சார்ந்த வன்முறைகள் *(GENDER BASED VIOLENCE - GBV)*

ஆணும் பெண்ணும் நம் சமூகத்தில் வெவ்வேறுவிதமான பாலின வரையறைகளோடு இருக்கும்படியாக வளர்க்கப்படுகிறார்கள்.





கருவில் இருக்கும் பொழுதே பாலியல் ரீதியான வன்முறைகள் தொடங்கிவிடுகின்றன. கருவில் இருக்கும் குழந்தை ஆணா, பெண்ணா என்று பார்த்து, பெண் கரு என்றால் அதை அழித்துவிடுகிறார்கள். வளரும் காலக்கட்டத்திலும் ஆண்கள் மேலானவர்கள், பெண்கள் இரண்டாம் நிலை அந்தஸ்து உடையவர்கள் என்ற பார்வையின் காரணமாக ஊட்டச்சத்து, கல்வி போன்றவற்றில் ஆண்களுக்கே அதிக முன்னுரிமை அளிக்கப்படுகிறது. பிறகு ஒவ்வொரு காலக்கட்டத்திலும் வெவ்வேறுவிதமாக பாலியல் ரீதியான வன்முறை தொடர்கிறது .

வளரிளம் பருவத்தில் இருக்கக்கூடிய ஆண்கள் பெண்கள் இருவருமே பாலியல் ரீதியான வன்முறையால் மிகவும் அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள். பெண்கள் அடங்கிப் போகிறவராக இருப்பதால் அதிகமான பாதிப்பைச் சந்திக்கிறார்கள். ஆண் தன்னை அதிகாரம் உடையவனாகக் கருதிக்கொண்டு தான் எது வேண்டுமானாலும் செய்யலாம் என்ற எண்ணத்தில் இருப்பதே அவனுக்கான வன்முறையாகப் போய்விடுகிறது. வளரிளம் பருவத்தினரின் மேம்பாட்டுக்காகப் பாடுபடக்கூடிய நாம் அனைவரும் இவை எல்லாவற்றையும் பற்றி சிந்திக்க வேண்டியிருக்கிறது .

### வளரிளம் பருவத்தினரின் வளர்ச்சி என்பது ஐந்து அம்சங்களை உள்ளடக்கியது :


- வளரிளம் பருவத்தினருக்கு கல்வி கற்க வாய்ப்பு இருக்க வேண்டும்.
- உடல்நலத்தை பராமரிப்பதற்கான வாய்ப்புகள் இருக்க வேண்டும்.
- ஊட்டச்சத்தான உணவு கிடைக்க வேண்டும்.
- வளரிளம் பருவத்தினருக்கு தன்சுத்தம் மற்றும் சுற்றுப்புற சுகாதாரத்தைப் பேணுவதற்கான வசதிகள் இருக்க வேண்டும்.
- திறன்களை நன்கு வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்புகள் இருக்க வேண்டும்.

வளரிளம் பருவத்தினரின் மேம்பாடு என்பது கல்வி, உடல்நலம், சுகாதாரம், திறன் மேம்பாடு போன்ற எல்லா அம்சங்களையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

இந்த மேம்பாட்டை வளரிளம் பருவத்தினருக்குப் பெற்றுத்தர வேண்டுமென்றால் எவையெல்லாம் அதற்குத் தடையாக உள்ளது? என்றும் அதைக் களைவதற்கு மேற்குறிப்பிட்டுள்ள கருத்தாக்கங்களை எல்லாம் இணைத்து என்னென்ன செயல் உத்திகளை உருவாக்கப் போகிறோம் என்று எண்ணிச் செயல்பட வேண்டும்.



# கருத்தாக்கங்களின் அடிப்படையிலான செயல் உத்திகள்



நம்முடைய திட்டத்தின் முக்கிய நோக்கம், *18* வயதுக்கு உட்பட்ட பெண் குழந்தைகளுக்குத் திருமணம் நடைபெறுவதைக் குறைத்தல், தடுத்தல், காலப் போக்கில் அதனை முடிவுக்குக் கொண்டு வருதல்.

வளரிளம் பருவத்தினர் தன்னுரிமை மேம்பாடு அடைந்து அவர்கள் வாழ்வின் ஒட்டுமொத்த வளர்ச்சியைப் பெற உதவுவதன் மூலம் ஒரு வலிமையான எதிர்காலத்தை உருவாக்குதல்.

இதற்கு நாம் மாற்றத்திற்கான கோட்பாடு, சமூக மற்றும் சுற்றுப்புறச் சூழல் மாதிரி, சமூகம் மற்றும் நடத்தை மாற்றத் தகவல்தொடர்பு, சமூக விதிகள் மற்றும் பாலினம் சார்ந்த வன்முறைகளைப் புரிந்து கொண்டு நாம் யாரோடெல்லாம் பணிபுரியப்போகிறோம், எந்தக் கருத்துக்களை, எந்த வடிவில், செயல் திட்டமாகக் கொண்டு செல்லப்போகிறோம் என்று பார்ப்போம் .

## இலக்கு

*18 வயதுக்கு உட்பட்ட பெண் குழந்தைகளுக்கு திருமணம் நடைபெறுவதை முடிவுக்கு கொண்டுவருதல்.*







## பங்காளர் - வளரிளம் பருவ ஆண்கள், பெண்கள்

### விரும்பும் மாற்றம்

- *இளவயது திருமணத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான முயற்சியில் குழுவாக இணைந்து பணியாற்றுவதற்காக, வளரிளம் பருவத்தினருக்குப் பயிற்சி அளித்து அவர்களைத் தன்னுரிமை பெற்றவர்கள் ஆக்குதல் .*

### மாற்றம் தேவைப்படும் சமூக விதிமுறைகள், பாலினம் சார்ந்த வன்முறைகள் அவற்றை ஏற்படுத்தத் தேவையான நடவடிக்கைகள்:

- *பாலினப் பாரபட்சம், மனித உரிமைகள், பாலின வன்முறை போன்றவை குறித்து வளரிளம் பருவத்தினருக்குப் பயிற்சி.*
- *குழந்தைத் திருமணம் உட்பட பெண்களுக்கெதிரான பலவகையான வன்முறைகள், அவற்றின் தாக்கம் மற்றும் உரிமை மீறல்களைக் கண்டறியப் பயிற்சி.*
- *வளரிளம் பெண்களும் ஆண்களும் தன்னுரிமை மேம்பாடு அடைவதற்கான வாழ்க்கைத்திறன் கல்வி.*

### செயல்பாட்டால் வரக்கூடிய விளைவுகள் / தாக்கம்

- *மனித உரிமைகள் மற்றும் பாலின பாரபட்சம் குறித்து வளரிளம் பருவத்தினர் புரிந்துகொள்வார்கள்.*
- *வீடுகளில் பாரபட்சமாக நடத்தப்படுவது குறித்து வளரிளம் பருவத்தினர் கேள்வி எழுப்புவார்கள்.*
- *முடிவெடுக்கும் திறன் மற்றும் உடன்பாட்டுக்கான பேச்சுவார்த்தைத் திறன்களைப் பயன்படுத்த கற்றிருப்பார்கள்.*
- *வளரிளம் பருவத்தினர் சம வயது குழுக்களில் இணைவார்கள்.*
- *பிற வளரிளம் பருவத்தினருக்குப் பிரச்சினை வரும்போது ஆதரவாக நிற்பார்கள்.*



## பங்காளர் - குடும்பம் மற்றும் நண்பர்கள்

- பெற்றோர்கள், உறவினர்கள் மற்றும் இதர குடும்ப உறுப்பினர்களுடன் இணைந்து செயல்பட வேண்டும், ஏனெனில் பெண் குழந்தைகளின் திருமணம் குறித்து முடிவெடுப்பதில் அவர்கள்தான் முதன்மையான பங்காளர்கள்.

### விரும்பும் மாற்றம்

- பெண் குழந்தைகளின் மதிப்பை, தேவைகளை புரிந்து அவர்களின் வளர்ச்சிக்கு உதவுவதோடு, குழந்தைத் திருமணப் பழக்கத்தை கை விடுதல்

### மாற்றம் தேவைப்படும் சமூக விதிமுறைகள், பாலினம் சார்ந்த வன்முறைகள் அவற்றை ஏற்படுத்தத் தேவையான நடவடிக்கைகள்:

- ஆணும், பெண்ணும் அனைத்து வகையிலும் சமம் என்பதையும், பெண் குழந்தைகளை பாலின ரீதியாக பாரபட்சமாகவும், மதிப்புக் குறைவாகவும் நடத்தக்கூடாது என்பதையும் புரிந்துகொள்ளச் செய்தல்.
- இளவயது திருமணத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான முயற்சியில் குழுவாக இணைந்து பணியாற்றுவதற்காகப் பயிற்சி அளித்தல்.
- குழந்தைத் திருமணத்திற்கு எதிரான சட்டங்கள் பற்றி விளக்கிக் கூறுதல். இள வயது திருமணத்தைத் தாமதப்படுத்த நடைமுறையில் உள்ள அரசின் நலத்திட்டங்களையும் எப்படி பெறுவது என்பது பற்றிய தகவல்களையும் அளித்தல்.

### செயல்பாட்டால் வரக்கூடிய விளைவுகள் / தாக்கம்

- பெண்களின் மதிப்பறிந்து குடும்பத்துக்கு அவர்களின் பங்களிப்பை உணர்வார்கள்.
- பெண் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்வார்கள். பெண் குழந்தைகள் மற்றும் ஆண் குழந்தைகளுக்கு இளவயது திருமணத்தினால் ஏற்படும் பாதிப்புகளை புரிந்துகொள்வார்கள்.
- குழந்தைத் திருமணத்திற்கு எதிரான சட்டங்கள் குறித்து அறிந்து கொள்வார்கள். இளம் வயது திருமணத்தை தாமதப்படுத்த நடைமுறையில் உள்ள அரசின் நலத்திட்டங்களைப் பற்றியும் அவற்றை பெறுவதற்கு பஞ்சாயத்து அமைப்புகள் மற்றும் பள்ளி மேலாண்மைக் குழுவின் ஆதரவைப் பெறமுடியும் என்பதையும் அறிந்து கொள்வார்கள்.

பள்ளி மேலாண்மைக் குழுவில் பங்கேற்பார்கள். இளவயது திருமண தடுப்புக் குழுவில் இடம் பெறுவார்கள். தங்களது சமூகத்தில் நடைபெறும் இளவயதுத் திருமணத்தை புறக்கணிக்கத் தொடங்குவார்கள்.



## பங்காளர் - ஆசிரியர்கள்

பெற்றோர்களுக்கு அடுத்தபடியாக, குழந்தைகளைத் தினசரி சந்திப்பவர்கள் பள்ளிகளில் இருக்கக்கூடிய ஆசிரியர்களும், பள்ளியோடு சம்பந்தப்பட்ட பிற பெரியவர்களும்தான். குழந்தைத் திருமணங்களைத் தடுக்கக்கூடிய மிக முக்கியமான பொறுப்பு, பள்ளி ஆசிரியர்கள் மற்றும் பள்ளிக் கல்வி அதிகாரிகளுக்கும் உண்டு.

### விரும்பும் மாற்றம்

- ஆசிரியர்கள் பாலின பேதமில்லாமல் இருபாலரையும் மதித்தல்.
- பெண் குழந்தைகளின் வருகையில் பிரச்சினை இருப்பது தெரிய வந்தால் , தன்னளவில் உறுதி செய்த பின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தகவல்கள் அளித்தல்.
- வளரிளம் பருவத்தினருக்கு பாலின சமத்துவம் , வன்முறை , இளவயது திருமணத்தால் வரக்கூடிய பிரச்சினைகள் குறித்து பயிற்சி அளிப்பதற்கான பயிற்சிகளில் ஆர்வமாகப் பங்கெடுப்பதோடு , அவர்கள் வாழ்வு மேம்பாடு அடைய அனைத்து உதவிகளையும் செய்பவர்களாக இருத்தல்.

### மாற்றம் தேவைப்படும் சமூக விதிமுறைகள், பாலினம் சார்ந்த வன்முறைகள் அவற்றை ஏற்படுத்தத் தேவையான நடவடிக்கைகள்:

- பாலின பாரபட்சம், மனித உரிமைகள், பாலின வன்முறை போன்றவை குறித்து ஆசிரியர்களுக்குப் பயிற்சி.
- குழந்தைத் திருமணம் உட்பட பெண்களுக்கெதிரான பலவகையான வன்முறைகள், அவற்றின் தாக்கம் மற்றும் உரிமை மீறல்களைப் பற்றி வளரிளம் பருவத்தினருக்கு எடுத்துச் சொல்வதற்கான பயிற்சி.
- வளரிளம் பருவப் பெண்களும் ஆண்களும் தன்னுரிமை மேம்பாடு அடைவதற்கான வாழ்க்கைத்திறன் கல்வியை அளிப்பதற்கான பயிற்சி.

### செயல்பாட்டால் வரக்கூடிய விளைவுகள் / தாக்கம்

- பாலினப் பாரபட்சம், குழந்தைத் திருமணம் தொடர்பான சமூகத்தின் விதிமுறைகளை புரிந்து கொள்வார்கள்.





- ஆசிரியர்கள், அவர்கள் வேலைசெய்யும் ஊரில் குழந்தைத் திருமணம் பற்றிய தகவல் அறிந்தாலும் அல்லது அதுகுறித்த சந்தேகம் ஏற்பட்டாலும் உடனடியாக வேகமாகச் செயல்பட்டு அத்தகையத் திருமணங்களைத் தடுக்க மற்ற அதிகாரிகளுக்கு உதவுவார்கள். பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், பெற்றோர்களிடமும், மாணவர்களிடமும் மற்ற ஆசிரியர்களிடமும், பள்ளித் தலைமை ஆசிரியர்களிடமும் இது குறித்துத் தொடர்ந்து உரையாடுவார்கள்.

- பெற்றோர் ஆசிரியர் குழு, பள்ளி மேலாண்மைக் குழு மற்றும் கிராமத்திலுள்ள பிற குழுக்களில் உறுப்பினராய் இணைவதோடு குழந்தைத் திருமணப் பிரச்சினை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவார்கள், கேள்விகள் கேட்பார்கள். இளவயதுத் திருமணத்தை தடுக்க மாணவர்கள் பள்ளி இடைநிற்றலைக் கண்காணித்து தடுப்பார்கள் .



## பங்காளர் - முன்னணிக் களப்பணியாளர்கள் (ஆரம்ப சுகாதாரச் செவிலியர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், ஆஷா பணியாளர்கள்)

சமூக நலத்துறை, சுகாதாரத் துறைகளின் முன்னணிக் களப்பணியாளர்களுக்கு (ASHA, AWW, ANM) மக்களிடையே போதுமான மதிப்பும் மரியாதையும் உள்ளது. சமுதாயத்தில் விழிப்புணர்வு, கல்வி மற்றும் உடல் நலத்தின் தூதுவர்களாக அவர்கள் கருதப்படுகின்றனர். அவர்களால் குழந்தைத் திருமணப் பழக்கத்தைத் தடுப்பதுடன் மனித உரிமைப் பிரச்சினைகளையும் எடுத்துரைக்க முடியும்.

### விரும்பும் மாற்றம்

- கிராமத்தில் குழந்தை பிறப்பு பதிவு, திருமண பதிவு, அந்தக் கிராமத்தில் உள்ள அனைத்து வளரிளம் பருவத்தினரின் விவரம்- இவை அனைத்தும் முன்னணிக் களப்பணியாளர்களுக்குத் தெரிந்திருக்கும்.
- அங்கன்வாடி மையங்களுக்கு வரும் பெண் குழந்தைகளின் வருகையில் பிரச்சினை இருப்பது தெரிய வந்தால், தன்னளவில் உறுதி செய்த பின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தகவல்கள் அளித்தல்.
- வளரிளம் பருவத்தினருக்கு பாலின சமத்துவம், வன்முறை, இளவயது திருமணத்தால் வரக்கூடிய பிரச்சினைகள் குறித்து பயிற்சி அளிப்பதற்கான பயிற்சிகளில் ஆர்வமாக பங்கெடுப்பதோடு, அவர்கள் வாழ்வு மேம்பாடு அடைய அனைத்து உதவிகளையும் செய்பவர்களாக இருத்தல்.

### மாற்றம் தேவைப்படும் சமூக விதிமுறைகள், பாலினம் சார்ந்த வன்முறைகள் அவற்றை ஏற்படுத்தத் தேவையான நடவடிக்கைகள்:

- பாலினப் பாரபட்சம், மனித உரிமைகள், பாலின வன்முறை போன்றவை குறித்து பயிற்சி.
- குழந்தைத் திருமணம் உட்பட பெண்களுக்கெதிரான பலவகையான வன்முறைகள், அவற்றின் தாக்கம் மற்றும் உரிமை மீறல்களைப் பற்றி வளரிளம் பருவத்தினருக்கு எடுத்துச் சொல்வதற்கான பயிற்சி.



- குழந்தைத் திருமணத்திற்கு எதிரான சட்டங்கள் பற்றி விளக்கிக் கூறுதல். இள வயதுத் திருமணத்தை தாமதப்படுத்துவதற்கான அரசின் நலத்திட்டங்களையும் எப்படி பெறுவது என்பது பற்றிய தகவல்களையும் அளித்தல் .

- மற்றவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கு ஏற்ற வகையில் களப் பணியாளர்களுக்கு கையேடுகளை வழங்குதல்.

- இந்த பிரச்சினை குறித்து பெற்றோர்களிடம் விவாதிப்பதற்காக களப் பணியாளர்களுக்குத் தேவையான தகவல்களை வழங்க வேண்டும்.

## செயல்பாட்டால் வரக்கூடிய விளைவுகள் / தாக்கம்

- குழந்தைத் திருமணம் குறித்து களப்பணியாளர்கள் அவர்கள் சார்ந்த சமூகத்தில் உள்ள பெற்றோர்கள், வளரிளம் பருவத்தினருடன் பேசுவார்கள்.

- சமூக அளவில் பிறப்புப் பதிவைக் களப்பணியாளர்கள் உறுதி செய்வார்கள்

- .

- களப் பணியாளர்கள், குழந்தைத் திருமணத் தடுப்பு நடவடிக்கைகளில் மற்றவர்களுடன் இணைந்து செயல்படுவார்கள் .





## பங்காளர் -பஞ்சாயத்து அமைப்பு

கிராம அளவில், முதன்மையான அதிகாரம் படைத்தவர்கள் பஞ்சாயத்து தலைவர் மற்றும் உறுப்பினர்கள்தான். அந்தக் கிராமத்திற்கு தலைமைப் பொறுப்பேற்று கிராமத்தை வழி நடத்துபவராக, கிராமத்தின் முன்னேற்றத்திற்கு பாடுபடுபவராக மக்களின் துயர்களை நீக்குபவராக செயல்படுபவர் பஞ்சாயத்துத் தலைவரும் பஞ்சாயத்து உறுப்பினர்களும்தான்.

ஒரு கிராமத்தில் கலாச்சார மதிப்பீடுகள் காரணமாக குழந்தைத் திருமணம், வரதட்சணை பிரச்சினை நடந்து கொண்டிருந்தாலும், அதைத் தங்கள் கவனத்தில் எடுத்து துரிதமாகச் செயல்படும் அதிகாரமும், பொறுப்பும் உடையவர்கள் கிராமத்துப் பஞ்சாயத்துத் தலைவரும் உறுப்பினர்களும்தான்.

### விரும்பும் மாற்றம்

- ஒவ்வொரு பஞ்சாயத்தும் குழந்தைத் திருமணம் இல்லாத பஞ்சாயத்தாக வேண்டும்.
- கிராமங்கள் பெண்களுக்குப் பாதுகாப்பான இடமாக வேண்டும்.
- கிராமத்தில் உள்ள பல வகையான குழுக்களும் செயல் ஊக்கத்துடன் இயங்க வேண்டும்.
- ஊரில் நடக்கும் அனைத்துத் திருமணங்களும் பதிவு செய்யப்பட வேண்டும்.

### மாற்றம் தேவைப்படும் சமூக விதிமுறைகள், பாலினம் சார்ந்த வன்முறைகள் அவற்றை ஏற்படுத்தத் தேவையான நடவடிக்கைகள்:

- பாலின பாரபட்சம், மனித உரிமைகள், பாலின வன்முறை, குழந்தைத் திருமணம், கலாச்சாரம் – இவை குறித்து சமூக விதிமுறைகள் பற்றி பஞ்சாயத்து உறுப்பினர்களுக்குப் பயிற்சி.
- குழந்தைத் திருமணத்திற்கு எதிரான சட்டங்கள் பற்றி விளக்கிக் கூறுதல். இள வயதுத் திருமணத்தைத் தாமதப்படுத்த நடைமுறையில் உள்ள அரசின் நலத்திட்டங்கள் குறித்தும் அவற்றை மக்கள் பெற வழிகாட்டுவதற்குமான பயிற்சி.
- பஞ்சாயத்துக் கூட்டங்களிலும், கிராமக் கூட்டங்களிலும் குழந்தைத் திருமணத்தினால் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும் வரதட்சணைப் பிரச்சினைகள் குறித்தும் பேசுவதற்கு





தேவையான குறிப்புகளையும், தகவல் கையேடுகளையும், போஸ்டர்களையும் விநியோகித்தல்.

## செயல்பாட்டால் வரக்கூடிய விளைவுகள் / தாக்கம்

- குழந்தைத் திருமணத் தடைச் சட்டம் (2006), வரதட்சணைத் தடைச் சட்டம் (1961) ஆகியவற்றின்படி அதற்கு எதிராக குழந்தைத் திருமணம் செய்து வைப்பவர்கள் மீதும் வரதட்சணை வாங்குபவர்கள் மீதும் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஊரில் அறிவிப்பு செய்வார்கள்.

- கிராமக் கூட்டம், பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டம், சுதந்திர தினம், குடியரசு தினம் மற்றும் திருவிழா நாட்களில் குழந்தைத் திருமணம், வரதட்சணைப் பழக்கம் ஆகிய இரண்டுமே சட்ட விரோதமானவை என்பதை மக்களுக்கு எடுத்துரைப்பார்கள்.

- தங்கள் கிராமங்களில் இந்தக் கொடுமைகள் நடக்காமல் இருக்க தீர்மானங்களை நிறைவேற்றுவார்கள்.

- ஊரில் நடக்கும் அனைத்துத் திருமணங்களையும் பதிவு செய்யச் சொல்லி வலியுறுத்துவார்கள்.

- பெண் குழந்தைகள் மற்றும் பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் பஞ்சாயத்துராஜ் அமைப்புகள் பாதுகாப்பான போக்குவரத்து வசதிகள் உள்ளிட்ட தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள்.

- குழந்தைத் திருமண பிரச்சினைக்குத் தீர்வு காணும் சட்ட ரீதியான நடவடிக்கைகளில் காவல்துறை, மாவட்ட மாஜிஸ்திரேட் ஆகியோருடன் பஞ்சாயத்துராஜ் அமைப்புகள் இணைந்து செயல்படுவார்கள்.

## பங்காளர் - மாவட்ட குழந்தைப் பாதுகாப்பு அலகு, காவல் துறை ,குழந்தைத் திருமணத் தடுப்பு அதிகாரி

### விரும்பும் மாற்றம்

- ஒவ்வொரு மாவட்டத்திலும் குழந்தைத் திருமணங்கள் படிப்படியாக ஒழிக்கப்பட்டு குழந்தைத் திருமணப் பழக்கம் முடிவுக்கு வரவேண்டும்.
- குழந்தைத் திருமணதடுப்பு பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் பாலின வேறுபாடுகள், பாலின அடிப்படையிலான வன்முறை இவை தொடர்பான பழக்க வழக்கங்கள் (சமூக விதிகள்) போன்றவற்றை புரிந்துகொண்டு செயல்பட வேண்டும்.

### மாற்றம் தேவைப்படும் சமூக விதிமுறைகள், பாலினம் சார்ந்த வன்முறைகள் அவற்றை ஏற்படுத்தத் தேவையான நடவடிக்கைகள்:

- பாலினப் பாரபட்சம், மனித உரிமைகள், பாலின வன்முறை, குழந்தைத் திருமணம், கலாச்சாரம் – இவை பற்றிய சமூக விதிமுறைகள் குறித்து குழந்தைப் பாதுகாப்பு மற்றும் குழந்தைத் திருமணத் தடுப்பு அலுவலருக்கான பயிற்சி.
- குழந்தைத் திருமணத்திற்கு எதிரான சட்டங்கள் பற்றி விளக்கிக் கூறுதல். இளவயதுத் திருமணத்தைத் தாமதப்படுத்த நடைமுறையில் உள்ள அரசின் நலத்திட்டங்கள் குறித்தும் அவற்றை மக்கள் பெற வழிகாட்டுவதற்குமான பயிற்சி.

### செயல்பாட்டால் வரக்கூடிய விளைவுகள் / தாக்கம்

- குழந்தைத்திருமணத்தடுப்பு குறித்து பணியாற்றும் குழந்தைப் பாதுகாப்பு அலுவலர்கள் அவர்கள் சார்ந்த சமூகத்தில் உள்ள பெற்றோர்கள், வளரிளம் பருவத்தினருடன் பேசுவார்கள்.
- குழந்தைத் திருமணத் தடுப்பு குறித்து பணியாற்றும் குழந்தை பாதுகாப்பு அலுவலர்கள், குழந்தைத் திருமணத் தடுப்பு நடவடிக்கைகளில் மற்றவர்களுடன் இணைந்து செயல்படுவார்கள்.





## பங்காளர் -கொள்கை வகுக்கும் நிறுவனங்கள் (அரசு)

### விரும்பும் மாற்றம்

- குழந்தைத் திருமணம் முற்றிலும் ஒழிக்கப்பட்ட மாநிலமாக மாற வேண்டும்.
- பெண் குழந்தைகளுக்குக் கல்வி, உடல்நலம், பாதுகாப்பு, பாலின சமத்துவம் இவற்றை மேலும் உறுதிப்படுத்தும் சட்டங்களும், திட்டங்களும் பங்காளர்களுடன் இணைந்து வகுக்கப்பட வேண்டும்.
- சட்டங்களையும், திட்டங்களையும் வலிமையோடு அமல்படுத்த வேண்டும்.

### மாற்றம் தேவைப்படும் சமூக விதிமுறைகள், பாலினம் சார்ந்த வன்முறைகள் அவற்றை ஏற்படுத்தத் தேவையான நடவடிக்கைகள்:

- பெண் குழந்தைகளின் மதிப்பு உயர்த்தப்படுவதற்குக் கல்வி, வேலைவாய்ப்பு, பாதுகாப்பான நடமாட்டம், சொத்தில் பங்கு இவற்றை உறுதிப்படுத்தும் செயல்களை வடிவமைத்து அமல்படுத்துதல்.
- வளரிளம் பருவத்தினரின் மேம்பாட்டுக்கான கொள்கைகளை வகுக்கும் பொழுது அக்குழுவில் அவர்கள் வாழ்வோடு சம்பந்தப்பட்ட அனைத்துப் பங்காளர்களின் கருத்துக்களுக்கும் இடமிருக்கும்படி அவர்களைப் பிரதிநிதிகளாகச் சேர்க்க வேண்டும்.

### செயல்பாட்டால் வரக்கூடிய விளைவுகள் / தாக்கம்

- பெண் குழந்தைகளைச் சுமையாக கருதாத சமூகம் உருவாகும்.
- பெண்கள் தன்னுரிமை மேம்பாட்டை அடைவதோடு, தங்கள் சொந்தக்காலில் நிற்பதால் வாழ்வின் சவால்களை துணிவோடு எதிர் கொள்வார்கள்.



## பங்காளர் - ஊடகம்

### விரும்பும் மாற்றம்

- ஊடகங்கள், பெண்களைவெறும்போகப்பொருளாகபார்க்காமல்அவர்களுக்கும் ஆண்களைப்போல் சமத்துவமான வாழ்க்கையை வாழ உரிமையுள்ளது என்பதை உணர்வார்கள்.
- ஆண் பெண் உறவுகள், குழந்தைத் திருமணம் என்று எந்த விஷயமாக இருந்தாலும் அதை பரபரப்பான செய்தி ஆக்காமல் பொறுப்புணர்வோடு செயல்படுவார்கள்.

### மாற்றம் தேவைப்படும் சமூக விதிமுறைகள், பாலினம் சார்ந்த வன்முறைகள் அவற்றை ஏற்படுத்தத் தேவையான நடவடிக்கைகள்:

- குழந்தைத் திருமணப் பிரச்சினை என்பது பரப்பான செய்தியல்ல, அது நிகழ்வதற்கு காரணமே நம் சமூகத்தில் உள்ள பாலின வேறுபாடுகள், மற்றும் அது சார்ந்து வரக்கூடிய வன்முறைகள்தான் என்ற பார்வை மாற்றம் பற்றி உரையாடத் தொடங்க வேண்டும்.
- குடும்ப வன்முறை குறித்து மக்கள் மனதில் பரவலாக இருக்கக்கூடிய பழமைவாத மதிப்பீடுகள் பற்றி ஊடகத்தினருக்குப் பயிற்சி அளிக்கவேண்டும்.
- பிரச்சினைகளை வெளிச்சம் போட்டு காட்டுவது மட்டுமன்றி பிரச்சினையை சமாளித்து வெளிவருகின்ற வளரிளம் பருவத்தினர் குறித்து நேர்மறையான உண்மைச் சம்பவங்களை வெளியிடுவதன் மூலம் சமூகத்திற்கு ஒரு ஆரோக்கியமான பார்வையை அளிக்க முடியும் என்பதை உணர்த்த வேண்டும்.

### செயல்பாட்டால் வரக்கூடிய விளைவுகள் / தாக்கம்

- ஆணைப் பற்றியும் பெண்ணைப் பற்றியும் சமூகம் உருவாக்கி வைத்திருக்கக்கூடிய பிம்பங்களைத் திரும்ப பிரதிபலிப்பதால் பிரச்சினை மேலும் சிக்கலாகிறது என்று உணர்வார்கள்.
- வளரிளம் பருவத்தினர் தன்னுரிமை மேம்பாடு அடைவதற்கான நேர்மறை உண்மைச் சம்பவங்களை வெளியிட ஊக்கம் பெறுவார்கள்.

# இளந்தென்றல் பெட்டகத்தில் உள்ள தகவல் தொடர்பு சாதனங்கள்

| வரிசை எண் | இளந்தென்றல் பெட்டகம் | தொடர்பு சாதனம் யாருக்கானது |
|---|---|---|
| 1 | " இளந்தென்றல் பெட்டகம் ஓர் அறிமுகம் | அறிமுகப் புத்தகம் |
| 2 | " குழந்தைத் திருமணம் - ஏன்? எதற்கு? எப்படி? " | வளரிளம் பருவத்தினருடன் இணைந்து வேலை பார்க்கும் அனைவருக்குமான கருத்துப் புத்தகம் |
| 3 | "பாலினம் சார்ந்த வன்முறை : வளரிளம் பருவத்தினருடன் பேசுவோம்!" | வளரிளம் பருவத்தினருடன் இணைந்து வேலை பார்க்கும் அனைவருக்குமான கருத்துப் புத்தகம் |
| 4 | " களத்தில் சவால்கள் எதிர்கொள்வதற்கான உத்திகள்" | குழந்தைத் திருமணத் தடுப்புச் செயல்பாடுகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கான கருத்துப் புத்தகம் |
| 5 | " வளரிளம் பருவத்தினருக்கான வாழ்க்கைத் திறன்கள்" | வளரிளம் பருவத்தினருக்கானது |
| 6 | " வளரிளம் பருவ ஆண்களுக்கான திறன் வளர்ப்புப் பயிற்சிக் கையேடு" | வளரிளம் பருவ ஆண்களுக்கானது |
| 7 | " வளரிளம் பருவ பெண்களுக்கான திறன் வளர்ப்புப் பயிற்சிக் கையேடு" | வளரிளம் பருவ பெண்களுக்கானது |
| 8 | "வளரிளம் பருவ ஆண், பெண்களுக்கான திறன் வளர்ப்புப் பயிற்சிக் கையேடு" | வளரிளம் பருவத்தினருக்கானது |
| 9 | "முன்னணிக் களப்பணியாளர்களுக்கானத் வளர்ப்புப் பயிற்சிக் கையேடு" | முன்னணிக் களப்பணியாளர்களுக்கானது |



| | | |
|---|---|---|
| 10 | "குழந்தைகள் மற்றும் வளரிளம் பெண்களுக்கான சட்டங்கள் மற்றும் திட்டங்கள்" | வளரிளம் பருவத்தினருடன் இணைந்து வேலை பார்க்கும் அனைவருக்குமான தகவல் புத்தகம் |
| 11 | "குழந்தைத் திருமணத் தடுப்பு அலுவலர்/ சமூகநலத் துறை - நிர்ணயிக்கப்பட்ட செயல்பாட்டு வழிமுறைகள்" | குழந்தைத் திருமணத் தடுப்பு அலுவலருக்கானது |
| 12 | " மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர் - நிர்ணயிக்கப்பட்ட செயல்பாட்டு வழிமுறைகள்" | மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலருக்கானது |
| 13 | " முன்னணிக் களப்பணியாளர்- நிர்ணயிக்கப்பட்ட செயல்பாட்டு வழிமுறைகள்" | முன்னணிக் களப்பணியாளருக்கானது |
| 14 | "பஞ்சாயத்துத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்- நிர்ணயிக்கப்பட்ட செயல்பாட்டு வழிமுறைகள்" | பஞ்சாயத்துத் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கானது |
| 15 | "காவல் துறை - நிர்ணயிக்கப்பட்ட செயல்பாட்டு வழிமுறைகள்" | காவல் துறை அலுவலருக்கானது |
| 16 | "பள்ளி ஆசிரியர்கள் - கல்வித் துறை நிர்ணயிக்கப்பட்ட செயல்பாட்டு வழிமுறைகள்" | பள்ளி ஆசிரியர்களுக்கானது |
| 17 | " பாலினம் சார்ந்த வன்முறை மற்றும் குழந்தைத் திருமணம் பற்றி குழந்தைப் பாதுகாப்பு அலுவலர்களுக்கான பயிற்சிக் கையேடு " | குழந்தைத் திருமண தடுப்பு அதிகாரிக்கானது (டூல் கிட்) |
| 18 | " பாலினம் சார்ந்த வன்முறை மற்றும் குழந்தைத் திருமணம் பற்றி குழந்தை திருமண தடுப்பு அலுவலர் / மாவட்ட சமூக நல அலுவலருக்கான பயிற்சிக் கையேடு " | மாவட்ட பாதுகாப்பு அலுவலருக்கானது (டூல் கிட்) |
| 19 | "பாலினம் சார்ந்த வன்முறை மற்றும் குழந்தைத் திருமணம் பற்றி முன்னணிக் களப்பணியாளர்களுக்கான பயிற்சிக் கையேடு" | முன்னணிக் களப்பணியாளருக்கானது (டூல் கிட்) |



| | | |
|---|---|---|
| 20 | " பாலினம் சார்ந்த வன்முறை மற்றும் குழந்தைத் திருமணம் பற்றி பஞ்சாயத்துத் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கான பயிற்சிக் கையேடு " | பஞ்சாயத்துத் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கானது (டூல் கிட்) |
| 21 | " பாலினம் சார்ந்த வன்முறை மற்றும் குழந்தைத் திருமணம் பற்றி காவல் துறையினருக்கான பயிற்சிக் கையேடு " | காவல் துறை அலுவலருக்கானது (டூல் கிட்) |
| 22 | "பாலினம் சார்ந்த வன்முறை மற்றும் குழந்தைத் திருமணம் பற்றி ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கையேடு " | பள்ளி ஆசிரியர்களுக்கானது (டூல் கிட்) |
| 23 | "பாதுகாப்பான குழந்தைப்பருவத் திட்டம் பஞ்சாயத்து உறுப்பினர்களுக்கான கையேடு" | பஞ்சாயத்துத் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கான கருத்துப் புத்தகம் |
| 24 | " குழந்தைத் திருமணம் - சமூகத்திற்கான பட விளக்கக்கையேடு " | சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கானது |




**இக்கருத்துப் பெட்டகத்தில் குழந்தைத் திருமணம் தொடர்பான படங்கள் மற்றும் குறும்படங்கள் அடங்கிய குறுந்தகடு இணைக்கப்பட்டுள்ளது.**





# பொருள் விளக்கம்

| | | |
|---|---|---|
| *Accredited Social Health Activisit (ASHA)* | : | சமூக சுகாதார செயல்பாட்டாளர்கள், ஆஷா பணியாளர்கள் |
| *Acquired immune Deficiency Dyndrome (AIDS)* | : | எய்ட்ஸ் |
| *Activity* | : | செயல்பாடு |
| *Adolescent Reproductive and Sexual Health (ARSH)* | | வளரிளம் பருவ இனப்பெருக்க மற்றும் பாலியல் சுகாதாரம். |
| *Adoption* | : | தத்தெடுத்தல் |
| *Advocacy* | : | ஆதரவுப் பிரச்சாரம் |
| *After Care* | : | பின் கவனிப்பு |
| *Anganwadi Centre (AWC)* | : | அங்கன்வாடி மையம் |
| *Anganwadi worker (AWW)* | : | அங்கன்வாடிப் பணியாளர் |
| *Anonymity* | | தன் பெயரை வெளிப்படுத்திக் கொள்ளமை |
| *Anti Human Trafficking Units (AHTU)* | : | மனிதக் கடத்தலுக்கு எதிரான பிரிவு |
| *Auxiliary Nurse Mid-wife (ANM)* | : | கிராம சுகாதார செவிலியர் |
| *Block level Child Protection Committees (BLCPC)* | : | வட்டார அளவிலான குழந்தை பாதுகாப்புக் குழு |
| *Case Study* | : | மாதிரி சம்பவங்கள் |
| *Central Adoption Resource Authority (CARA)* | : | மத்தியக் தத்தெடுப்பு வள முகமை |
| *Charge Sheet* | : | குற்றப் பத்திரிகை |
| *Chief Education Officer (CEO)* | : | முதன்மைக் கல்வி அதிகாரி |
| *Child Care Institution (CCI)* | : | குழந்தை பராமரிப்பு நிறுவனம் |
| *Child Care Institutions (CCI)* | : | குழந்தை பராமரிப்பு நிறுவனங்கள் |
| *Child Development and Project officer (CDPO)* | : | குழந்தை வளர்ச்சித் திட்ட அதிகாரி |
| *Child in Conflict with Law (CCL)* | : | சட்டத்துக்கு முரணாகச் செயல்படும் குழந்தைகள் |
| *Child in need of care and protection (CNCP)* | : | குழந்தைகள் இல்லம் |
| *Child Labour (Prohibition and Regulations) Amendment Act* | : | தொழிலாளர் (தொழிலாளர் நலச் சட்டம் (CLPRA), |
| *Child Labour Committee (CWC)* | : | குழந்தை நலக் குழு (- CNCP) |





| | |
|---|---|
| *Child Labour (Prohibition and Regulation) Act 2016* | குழந்தைத் தொழிலாளர்கள் (தடை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தும்) சட்டம் 2016. |
| *Child Marriage Prohibition Officer (CMPO)* | குழந்தைத் திருமணத் தடுப்பு அதிகாரி |
| *Child Marriage Restraint Act (1929)* | குழந்தைத் திருமணக் கட்டடுப்பாட்டுச் சட்டம், 1929 |
| *Child Sex Ratio (CSR)* | குழந்தை பாலின விகிதம் |
| *Child Welfare Committee (CWC)* | குழந்தை நலக் குழு |
| *Civil Society Organisations (CSOs)* | சிவில் சமூக அமைப்புகள் |
| *Community health Centre (CHC)* | சமூக சுகாதார மையம் |
| *Community Workers* | சமூகப பணியாளர்கள் |
| *Compensation Order* | நிவாரண ஆணை |
| *Convention on the Elimination of all Forms of Discrimination against women – CEDAW:* | பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாடுபாடுகளையும் ஒழித்தல் குறித்த பிரகடனம் |
| *Convention on the rights of the Girl Child - CRC:* | பெருந்தொழில் நிறுவனங்களின் சமூகப் பொறுப்பு |
| *Custodial rape* | காவலில் வைத்து பாலியல் வன்புணர்வு |
| *Custody Order* | காவல் ஆணை |
| *District Child protection committee (DCPC)* | மாவட்ட குழந்தை பாதுகாப்புக் குழு |
| *District Child protection Officer (DCP0)* | மாவட்ட குழந்தை பாதுகாப்பு அதிகாரி |
| *District Child Protection Unit (DCPU)* | மாவட்ட குழந்தை பாதுகாப்பு பிரிவு |
| *District Education Officer (DEO)* | மாவட்டக் கல்வி அதிகாரி |
| *District Level Household Survey* | மாவட்ட அளவிலான வீடுகள்தோறும் கணக்கெடுப்பு |
| *District Rural Development Agency* | மாவட்ட ஊரக மேம்பாட்டு முகமை |
| *District Task Force* | மாவட்ட பணிக்குழு |
| *Domestic violence* | குடும்ப வன்முறை |
| *Dowry Prohibition Act (1961)* | வரதட்சனணத் தடுப்புச் சட்டம் |
| *Duty Bearers* | சட்டத்தை நடைமுறைப்படுத்துபவர, அமல்படுத்துபவர் |
| *Early marriage* | இளவயதுத் திருமணம் |
| *Economic Exploitation* | பொருளாதாரச் சுரண்டல் |



| | |
|---|---|
| *Empowerment* | தன்னுரிமை மேம்பாடு |
| *First information Report (FIR)* | முதல் தகவல் அறிக்கை |
| *Foster Care* | வளர்ப்புப் பராமரிப்பு |
| *Frontline Worker* | முன்னணி களப்பணியாளர் |
| *Gender based violence* | பாலினம் சார்ந்த வன்முறை |
| *Gender Discrimination* | பாலினப் பாகுபாடு |
| *Gender* | சமூகப் பாலினம் |
| *Gender Stereotype* | பாலினம்சார் பாத்திர வரையறைகள் |
| *Grievance Redressal Mechanism* | குறைதீர்க்கும் முறை |
| *Group Foster Care* | குழுவாக வளர்ப்புப் பராமரிப்பு |
| *Hindu Marriage Act (1955)* | இந்துத் திருமணச் சட்டம் |
| *Human Trafficking* | ஆட்கடத்தல் |
| *Infant Mortality Rate* | சிசு மரண விகிதம் |
| *Integrated Child Development Scheme (ICDS)* | ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டுத் திட்டம். |
| *Integrated Child Protection Scheme (ICPS)* | ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் |
| *Intervention* | இடையீடு, இடையீட்டு நடவடிக்கை |
| *Juvenile Justice (Care and Protection of Children) Act 2015* | சிளஞ்சிறார் நீதி (குழந்தைகளை கவனித்துக் கொள்ளுதல் மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2015. |
| *Juvenile Justice Board* | இளஞ்சிறார் சீர்திருத்த நல வாரியம் |
| *Life Skills* | வாழ்க்கைத் திறன்கள் |
| *Mahatma Gandhi National Rural Employment Guarantee ACT (MGNREGA)* | மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உத்தரவாதச் சட்டம் |
| *Martial Abuse* | திருமண வன்புணர்வு |
| *Ministry of health and Family welfare* | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நல அமைச்சகம் |
| *Ministry of Home Affairs* | உள்துறை அமைச்சகம் |
| *Ministry of Human Resource Development* | மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் |
| *Ministry of Labour* | தொழிலாளர் நல அமைச்சகம் |



| | |
|---|---|
| *Ministry of Women and Child Development* | பெண்கள் மற்றும் குழந்தை மேம்பாட்டு அமைச்சகம் |
| *Missing Cell* | காணாமல் போனவர் பிரிவு |
| *Mobilisers* | ஒன்றிணைப்பாளர்கள |
| *Monetary Relief* | நிதி நிவாரணம் |
| *National Child Labour Project (NCLP)* | தேசியக் குழந்தைத் தொழிலாளர் திட்டம் |
| *National Commission for Protection of Child Rights (NCPCR)* | தேசியக் குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம். |
| *National Family Health Survey (NFHS)* | தேசியக் குடும்ப சுகாதாரக் கணக்கெடுப்பு |
| *National Human Rights Commission (NHRC)* | தேசிய மனித உரிமைகள் ஆணையம் |
| *National Plan of Action on Prevention of Child Marriage* | குழந்தைத் திருமணத்தைத் தடுப்பதற்கான தேசியச் செயல் திட்டம் |
| *National Policy for Children 2013* | குழந்தைகளுக்கான தேசியக் கொள்கை *(2013)* |
| *National Programme for Education of Girls at Elementary Education (NPEGEL)* | தொடக்கக் கல்விக்கான தேசியப் பெண் குழந்தைகள் கல்வித் திட்டம் |
| *National Strategy on Child Labour* | குழந்தைத் திருமணத் தடுப்பு தேசிய உத்திகள் |
| *Non-Governmental Organisation* | அரசுதார அமைப்புகள / தொண்டு நிறுவனங்கள் |
| *State Commission for Protection of Child Rights (SCPCR)* | மாநில குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் |
| *Observation Home* | கூர்நோக்கு இல்லம் |
| *Opinion leaders* | பொதுக் கருத்தை உருவாக்கும் தலைவர்கள் |
| *Panchayati Raj Institutions* | பஞ்சாயத்து அமைப்புகள் |
| *Peer Educator* | முன்மாதிரிக் கல்வியாளர் |
| *Plan of Action* | செயல்பாட்டுத் திட்டம் |
| *Pre-Conception and Pre-Natal Diagnostic Techniques Act, 1994* | தாய் வயிற்றில் வளரும் சிசுவின் பாலினத்தை அறிந்து கொள்வதைத் தடுக்கும் சட்டம். |
| *Premarital Pregnancy* | திருமணத்துக்கு முந்தையத் தாய்மை |







| | | |
|---|---|---|
| *Primary Health Centre (PHC)* | : | ஆரம்ப சுகாதார மையம் |
| *Prohibition of Child Marriage Act (2006)* | : | குழந்தைத் திருமணத் தடைச் சட்டம் |
| *Prohibition Officers* | : | குழந்தைத் திருமணத் தடுப்பு அலுவலர்கள் |
| *Protection of Women from Domestic Violence Act (2005)* | : | குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் *(2005)* |
| *Protection Order* | : | பாதுகாப்பு ஆணை |
| *Rajiv Gandhi Scheme for Empowerment of Adolescent Girls (RGSEAG) (SABLA)* | : | ராஜீவ்காந்தி வளரிளம் பெண்கள் தன்னுரிமை மேம்பாட்டுத் திட்டம் |
| *Rape* | : | பாலியல் பலாத்காரம் |
| *Rastriya Madhyamik Shiksha Abhiyan (RMSA)* | : | அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம் |
| *Reproductive and Sexual Rights* | : | இனப்பெருக்க மற்றும் பாலியல் உரிமைகள் |
| *Residence Order* | : | குடியிருப்பு ஆணை |
| *Right to Education Act (2009)* | : | அனைவருக்கும் கல்விச் சட்டம் |
| *Risk Mitigation* | : | துயர் தணிப்பு உத்திகள் |
| *Role Play* | : | பாவனை நாடகங்கள் |
| *Sarva Shiksha Abhiyan* | : | அனைவருக்கும் கல்வித் திட்டம் |
| *Sensitivity to Diversity* | : | பன்முகத்தன்மை உணர்வு |
| *Sex* | : | உடற்கூறு பாலினம் |
| *Sexual abuse* | : | பாலியல் ரீதியாக மோசமாக நடத்தல் |
| *Sexual Exploitation* | : | பாலியல் சுரண்டல் |
| *Sexual harassment* | : | பாலியல் துன்புறுத்தல், பாலியல் சீண்டல் |
| *Social Defence* | : | சமூகப் பாதுகாப்பு |
| *Social Justice Committee* | : | சமூகநீதிக் கையேடு |
| *Social Justice Committee* | : | சமூகநீதிக் குழு |
| *Social norms* | : | சமூக விதிகள் |
| *Socialisation* | : | சமூக மயமாதல் |
| *Special Marriage Act (1954)* | : | சிறப்புத் திருமணச் சட்டம் |
| *Specialised Adoption Agency (SAA)* | : | சிறப்பு தத்தெடுப்பு முகமை |



| | |
|---|---|
| *Stake Holders* | பங்காளர்கள் |
| *Standard Operating Procedure (SOP)* | நிர்ணயிக்கப்பட்ட செயல்பாட்டு வழிமுறைகள் |
| *State Adoption Advisory Committee (SAAC)* | மாநில தத்தெடுப்பு ஆலோசனைக் குழு |
| *State Adoption Resource Agency (SARA)* | மாநில தத்தெடுப்பு வள முகமை |
| *State Child Protection Society (SCPS)* | மாநிலக் குழந்தை பாதுகாப்பு சங்கம் |
| *State Child Protection Unit (SCPU)* | மாநிலக் குழந்தை பாதுகாப்புப் பிரிவு |
| *Stereotype* | ஒரே மாதிரியான பாத்திர வரையறைகள் |
| *Theory of Change* | மாற்றத்துக்கான கோட்பாடு |
| *Village Health Nurse* | கிராம சுகாதார செவிலியர் |
| *Village Level Child Protection Committees (VLCPC)* | கிராம அளவிலான குழந்தை பாதுகாப்புக் குழு |
| *Warrant* | பிடி ஆணை |
| *Without her Consent* | அவளது சம்மதம் இல்லாமல் |





## குறிப்புகள்



## குறிப்புகள்





## குறிப்புகள்